உ

ஸ்ரீ ராமஜெயம்.

தான்தோன்றி

ஸ்ரீவெங்கட்றமணஸ்வாமி பேரில்

பக்திரஸக் கீர்த்தனை.

Part 1.

இஃது

கரூர் தாலூகா ஆண்டாங்கோவில் கிராமம்
மொச்சகொட்டாம்பாளையம் மகா-ள-ள-ஸ்ரீ
ப. பெருமாள் கவுண்டர் 1, ஷை கிராமம்
ரெட்டியாபாளையம் ந. பழனிச்சாமிக் கவுண்டர் 2,
ஷையூர் பிரம்மஸ்ரீ தா. குப்புசாமி ஆச்சாரியார் 3,
இவர்கள் விருப்பத்தின்படி,

கரூர் தாலூகா புஞ்சைக்காளக்குறிச்சி கிராமம்
காசிபாளையத்திலிருக்கும் பிரம்மஸ்ரீ
பொன்னப்பாச்சாரியார் அவர்கள் குமாரர்
இராமசாமி ஆச்சாரியார் அவர்களால்
இயற்றபெற்று,

கரூர் "விவேகபானு அச்சுக்கூடத்தில்"
பதிப்பிக்கப்பெற்றது.

1926. [அணா 4

OFFICE OF THE REGISTRAR OF BO[OKS]
12 MAR 1926
[MADR]AS

Q22:417
N26
108528

உ

ஸ்ரீதாந்தோன்றி வெங்கட்றமண ஸ்வாமிபேரில்

பக்திரஸக் கீர்த்தனை.

வெண்பா.

பேரோங்கும் தாந்தோன்றி பெருமா ளவர்மீதில்
பாரோங்கும் கீர்த்தனைகள் பாடுதற்கு—நேராக
சீரோங்கி யெக்கும் சிறப்புற்றிட மகிழ்ந்துக்
காரானை மாமுகனே கார்.

விக்னேஸ்வரர்பேரில்.

பரமானந்த மெய்ப்பரங் குன்றேன் என்ற மெட்டு.

பல்லவி.

தேவா அருள்செய் கண நாதா — தினம்
துதித்துமே ராமசாமி போற்றும் — நன்னீதா (தே)

அனுபல்லவி.

காவாயிது சமயம் கஜமுக நாதா
கருணைசெய் தாண்டுமே வரந்தரும் நீதா
பாவ மணுகிடாமல் பாரும்நற் கீதா
பார்வதியாள் பயின்ற பங்கஜ வேதா (தேவா)

வாவா வல்லபையிடப் பாகா - வாமனயோகா
தேவா அருள்புரி தியாகா - உனைத்துதித்தேன்
நாவா லருள்புரி விவேகா - ஆவலாயோகா
நாடியே உன்பாதம் தேடினேன் கிருபையுண்டாக்கும்
நான் பாடிடும் ராமர் கீர்த்தனம் நீடித்திருக்க அருள்தாக்கும்
விக்கினமின்றி பாடிப் புகழும்படி நோக்கும்
உத்தமி யாகிய சத்தியின் பாலா
நித்ய தத்துவ லம்போதர சீலா
வித்தைக்குதவும் சிவன் பெற்றிடும் லோலா
சித்தியளிக்கும் ஆதி தேவனே மூலா. (தேவா)

சரஸ்வதி துதி.

அன்னையே நான் உன்னை நம்பினேன் என்ற மெட்டு.

பல்லவி.

அன்னவாகனம் மீதிலமரும் அம்பிகை மனேன்மணி
அடியேன் நாவில்க் குடியிருந்து அருள்புரிகுவாய் நாரணி

145578

அனுபல்லவி.

கின்னர் கிம்புரர் யாவர்க்கும்
சுதி கீர்த்தியழிக்கும் காரணி
கிருபை புரியும் சிறுவன் பாட
வரமழித்திடும் பூரணி (அன்)

வெண்டாமரை மலர் மீதுலாவும்
வேதன் நான்முகன் பாரி நீ
விக்கினமின்றி ராமர் கீர்த்தனம்
விளங்கச் செய்திடும் பூரணி (அன்ன)

நன்னயத்துடன் கவிகள் பாடும்
நாவலர்கள் தங்கள் முன்
சின்னம் சிறுவன் ராமசாமிபத்தன்
சீர் சிரந்திடும் படிசெய்குவாய் (அன்)

வேண்டினேன் சையோகமே என்ற மெட்டு.

பல்லவி.

வெண்ணையுண்ட வாயா - நான் வேண்டினேன் சகாயா
அன்னை ஜானகினேயா - அருள் புரிந்திடும் மாயா (வெ)

பூமிமுழுது முண்டாய் தேவர்—புகழும்படிக்கி நின்ருய் வந்த
பூதகிதனைக் கொன்ருய் பால்
பொருந்த அமிர்தம் கொண்டாய் - உன்னை
போற்றும் நாவலர்க் கீர்த்தி தந்தருள்
நாற்றிசை யெங்கும் போற்று மாயவா (வெ)

பாரதம் நிறைவேற்ற அன்று
பாண்டவரருளைப்போற்ற அவர்
பக்தியை நிறைவேற்ற அந்த
பாவி துரியன் மேவிய சேனை
யாவும் போரினில் ஆவி போக்கிய (வெ)

அண்டர்கள் துயர் தீர்த்தாய்
ஆதிமூல மென்ருேரை கார்த்தாய்
கொண்டல் வண்ண நீ பார்த்தாய் அந்தக்
கோதை சீதையை வாது செய்திட்ட
பாதக ரர்வணன் ஆவியை போக்கிட்ட (வெ)

தாங்தோன்றிமலையில் வாசா - ஹரி
தாசர்க்குதவும் நேசா உன்
பாதமே தருமுல் லாசா
பக்தர்கள் துய ரற்றிடத்ததி
சித்தமாகவே நத்தினேன் கதி (வெ)

பாடும் பாவலர்க் கென்றும் நல்
பாக்கியம் தாரும் சென்றும் - பாலன்
ராமசாமி சொல்லென்றும்
பாக்கியம் வெகு யோக்கிய குண
சிலாக்கியத்துடன் மாக்கிடுங்குண (வெ)

துலங்கு செம்போன் கோபுரம் என்ற மெட்டு.

பல்லவி.

உயர்ந்த தங்கக் கோபுரமாகிய — ஜெயம்பெரும்
தாங்தோன்றி மலைதனில் மேவிய
தேவாவுன் பதாம் தஞ்சமே
அலைமேல் மங்கைத்
தெரிசிக்கும் ஞான நெஞ்சமே (உயர்ந்த)

அனுபல்லவி.

பயம் தெளிந்துமே பாடவே ராமா
நயம் பெரும்படி வாக்கருள் நேமா
பாடும் படிக்கருள் பூமா கிருபை நீ
தாரும் கருணைசேர் சோமா (உயர்ந்த)

நரகரியென்று தினமு முன்பாதம்
நாடித் துதிப்ப வர்க்கு
நல்ல கதியைக் காட்டுவாய்
எங்கும் நிறைந்த தொல்லை
அகல ஓட்டுவாய் (உயர்ந்த)

கலிக்காவதாரப் புருஷனாய் பிறந்துக்
காரணமாகப் பூவுலகமர்ந்தக்
கண்ணாவுன் பாதம் தந்திடும்
எழியோர்க் கன்பு
மண்ணாவுன் புகழீய்ந்திடும் (உயர்ந்த)

மாயுமாய் தூணில் அவதாரம் செய்து
மன்ன ஹிரணியன் மார்பைப் பிளந்து
மாபாவம் தனைத் தீர்த்தவா
பிரகலாதற்கு என்னாளும்
மோட்ச மீய்ந்தவா (உயர்ந்த)

அண்டமேழையும் வுண்ட செவ்வாயா
அண்டர்கள் துயரம் அகற்றிடும் மாயா
அய்யாவுன் பாதம் நம்பினேன்
கிருபை செய்யும் மெய்யாக
நான் விரும்பினேன் (உயர்ந்த)

காசிநகரில் வளர் விஸ்வகுல
திலகன் கருத்துடன் ராமசாமி
திடத்துடன் பாடியக்
கீர்த்தனம் தன்னை போற்றுவாய்
பிசகிருந்தாலும் இதனை யேற்றுவாய் (உ)

கல்யாணம் செய்துவையுமே கண்ணபிரானே என்ற மெட்டு.

பல்லவி.

பரமானந்தம் பெறலாம் மனமே ஸ்ரீ அரி
பஜனை நாம் செய்தால் தினமே (பரமா)

அனுபல்லவி.

வரமிகத் தருகுவார் அரியின் பெயருகந்தால்
குரவொன்றும் வராதந்த முரகரியைப் பணிந்தால் (பர)

அன்று அகலியைப் பெண்ணாக்கிய போதன்
ஆனை அபயமிடக் காத்த வொய்யாரன்
மானபி மானத்தைத் தீர்க்கும் கெம்பீரன்
மனமகிழ்வுடன் பஜனைக்கு மகிழ்ந்திடும்தீரன் (பர)

துவாரகா புரிதனில் புகழ்பெறும் வாசன்
துரௌபதை முறையிடத் - துகில்தந்த நேசன்
அகில புவனமெங்கும் காக்கும் விசேஷன்
அரிபஜனைசெய்வோர்களை - ஆதரிக்கும் பிரகாசன் (பர)

பாவ கருமமெனும் இருவினை போக்கி
பாளும் உடம்பிலுள்ள துயரத்தை நீக்கி
நாளுமன் னுமத்தை மனத்திடமாக்கி
என்னாளும் ராமசாமியின் கீர்த்தனம் நோக்கி (பர)

o

மேற்படி மெட்டு.

பல்லவி.

மனமே நான்சொன்ன நிலை நாடும்
ஸ்ரீ அரி பதமலரடிகளைத் தேடும் (மன)

அநுபல்லவி.

குணமுடனவர்பாதம் மனதில்நின்றாடும்
குவலயமதனில் தாந்தோன்றியில் நீடும்
தினமும் ரெகுபதியின் தியானத்தை நாடும்
தெரிசித்தால் சாயுச்சிய பதவியும் கூடும். (மன)

ஆதியி லோங்கார மானதோர் - மாயன்
அகில புவனத்தையும் கார்த்திடும் - தூயன்
பாதாதி கேசத்தை படைத்திடும் நேயன்
பாவலர் தனக்குப்பண் பகர்ந்திடும்வாயன் (மன)

அகமகிழ்ந் தவர்பதி அன்பு பாராட்டி
அனுதினம் பஜனைகள் தினமுநாம் கூட்டி
புகழுடன் தியானத்தை மனத்தினில் மூட்டி
பூசித்தால் தருகுவார் புண்யமுங் காட்டி (மன)
பிரணவ மந்திரம் அடங்கிய போதம்
பிர்ந்தா வனந்தனில் திரிந்திடும் பாதம்
அருவ உருவமெல்லாம் ஆக்கிடும் நீதம்
அகமகிழ் ராமசாமிக்கி சுகம்கொடுக்கும் நன்னீதம்.

காருண்யனே அருள் என்ற மெட்டு.

பல்லவி

நாரணனே யுன்னை நாடிப் பணிந்தேன் ராமா
சிராய்த் தாந்தோன்றிமலை தேவா அருள்புரிவாய் (நா)

அநுபல்லவி.

பூரண வஸ்துவான புண்ணிய நாதனை
காரண புவிமீதில் கடாட்சம்வைத்தருள்மோன (நா)
வாது நீ செய்வதேது மைந்தன் னேழையின்மீது
பாதம் தரயிப்போது பட்சம்வராத தேது (நா)
இன்னும் பராமுகமாய் இருந்தா லெப்படி உய்வேன்
பன்னக சயனவுன் பாதுகார்க்க வருவாய் (நா)
ஆதாரம் வேறில்லையுன் பாதாரம் கெதியல்லால்
நீதா தான்தோன்றி மலை நாதா வந்தருள் செய்வாய் (நா)

காளி நகரைப்பெற்ற காசி நகரினுற்ற
ஏழை ராமசாமிக்கி இரங்கி யுன்னருள் போற்ற (நா)

தாதாபாய் நவரோஜி என்ற மெட்டு.

பல்லவி.

நாரணனே ஸ்ரீ ராமா நாரணனே
நம்பினே னுன்பாதம் - அன்புவைத் தாண்டருள் (நா)

அநுபல்லவி.

ஆரணப்பொருளாய் வந்தப்
பூரண வஸ்துவே யெங்கும்
அண்டர்கள் மூவர்க்கும் எண்டிசை யாவர்க்கும்
தொண்டர் வினைகளை கண்டிதம் செய்திடும் (நா)

தொகையரா

பூரண வஸ்துவாய்ப் பூலோகம் தன்னிலே
புகழ்பெற்ற சிங்கம் நீயே புண்யனே உன்
பாதம் நம்பினேன் என்னாளும் புனிதனே
உன்னருள் செய்வாயே.

பாட்டு

எங்கும் நிறைந்த கோனே ஏழைக்குதவும் சீமானே
ஏழு மராமரம் தன்னைத் துளைத்தவா
அன்னாளினில் வாலி உயிரைநீ மாய்த்தவா (நார)

தொகையரா.

பராபர வஸ்துவாய் பாருல கெலாம் ஓரடி
அளந்த பரமாத்ம ரூபனே - பரந்தாமனே உன்
பக்தனான் ராமசாமி ஆச்சாரிக் கின்னருள்
தந்துகார்ப்ப துன்கடன் தாந்தோன்றிமலைவாசனே (நா)

பாட்டு

தசரத சக்ரவர்த்தி தனயனா யீன்ற மூர்த்தி
தானுமே யுன்னிட கோதண்டம் முன்னிட
தாடகை தன்னை நீ சாடி யடித்தவா (நா)

அருள்செய்வாய் என்ற மெட்டு.

பல்லவி.

வரவேணும் இதுததி வரவேணும்
இத்தருணம் கருடனேறி கிருபை
அருள் புரிய வரவேணும்

பரந்தாமா உன் பதமலரடிதனை தினமும் துதித்திடவே பரந்தாமா
பக்தியாகா நித்தம் யோகா சித்தியாக
வித்தை விவேகா வரவேணும்

பஜனைசெய்துன் பதம் பாடினேம் தாமா
பரவும் தாந்தோன்றி மலை மேவிடும் பூமா
புஜமீதில் துளபம் பூண்டிடும் நேமா
புண்யநேமா கண்யராமா முன்பின்னுமா
நானென்றும் தாமா வரவேணும்

நந்தகோகிலந்தனில் கிருஷ்ணனுய் பிறந்து
நவநீதப் பெண்களுட சுகத்தைநீ யரிந்து
சுந்திரக் கோபாலர்க்கன்பு நீ புரிந்து
சுகம்கொடுத்து மிகத்துதித்து உனையடுத்து
தினந் துதித்தேன் வரவேணும்

மாயாவ தாரனே யென்முன்னே வாவா
மனமகிழும் லட்சுமி தன்னுடன் தேவா
நேயமாய் பத்தன் ராமசாமியை காவா
நேமமாக வாமயோக தேவகியாள்
யீன்ற யேகா வரவேணும்

இராஜனே யுமைப்பிரிந்திட என்ற மெட்டு.

பல்லவி.

ஏன் சஞ்சலப்படுகிராய் மனமே இந்த
இகபர வாழ்வைச் சதமென்று யெண்ணி நீ (ஏன்)

அனுபல்லவி.

வீண்சமுசார வாழ்க்கை வேடிக்கை நாட்டம்
விதமா யரிந்தவற்கு வெகுபொம்ம லாட்டம்
ஆடு மாடு பொருள் சந்தையின் கூட்டம் - இதை
அறிந்துமேபார்த்தால் தெரிந்திடும் சிரேஷ்டம் (ஏன்)

மாயப்பிரபஞ்ச வாழ்க்கையைத் தீர்ப்பார்
மனத்துயர் தீரவே மகிழ்ச்சியாய் கார்ப்பார்
நேயமா யவர்பாதம் நிஷ்டையில் சேர்ப்பார்
நிகழும்நா ளெல்லாம்போக்கி சுகமுடன் பார்ப்பார் (ஏன்)

அரிஅரி யென்றுதினம் புகழவும் வேண்டும்
ஆபத்பாந்தவா யென்று மகிழவும் தோன்றும்

நெறிதவறாத் தான்தோன்றி மலேதனில் சான்றும்
நிட்கள ரூபத்தை தெரிசித்தா லாண்டும் (என்)
பாப கருமமெனும் இருவினை நண்ணி - அந்தப்
பரம பதத்தையுன் மனத்தினி லெண்ணி
திடத்துடன் ராமசாமி கீர்த்தனம் உன்னிக்
கிருபையுண்டாகவே அருளுவீ றெண்ணி (என்)

நாதன் வரவுங்காணேன் என்ற மெட்டு.

பல்லவி.

தயவுசெய்தாளும் சர்வேசா
தாந்தோன்றி வாசா (தயவு)

அனுபல்லவி.

நயமிகு மலர்த்தாளா நம்பினேன் குணசீலா
நாடும் பொருளே ஆளாய்
நளினத் தோளா (தயவு)
அபயம் அபயமென்ற ஆனையைக்
காத்தீதானே அருள்தரும் அச்சுதனே
அண்டினேன் நானே (தயவு)
கோபாலர் மனைதனில் கோவின்பால்
வெண்ணெயுண்ட கோபால அரிநேசா
தாந்தோன்றி வாசா (தயவு)
பாற்கடல் தன்னில் பள்ளி
தீர்க்கமாய்கொண்டோனே காக்க நீ
வரம் தாரும் கிருபை கூறும் (தயவு)
வாசம் மிகுந்தபூமி வணங்கிடும்
ராமசாமி வரந்தரத் தருணம்
நேமி அருள்செய் சுவாமி (தயவு)

நடமிடும் பொற்பாதா என்ற மெட்டு.

பல்லவி.

பரந்தாமனையே துதித்தாடு - இனி
நல்ல பதவி தேடு (பரந்)

அனுபல்லவி.

பரந்தாமன் பதமலர் தினம்துதி செய்துமே
பாவமதனைப்போக்கும் அவர் பக்தியருளேயாக்கும்
தினம் புத்தி அறிவுண்டாக்கும் (பரந்)

தனதான்ய சம்பத்தை நீ   சதமென்று யெண்ணி நீ
தலைகிளாய் நில்லாதே   பொல்லா
மதமுடன் அரிபாதம்   மனதி லெண்ணாமலே
வழிதப்பிச் செல்லாதே   காயம் நில்லாதே   (பரங்)

ஈன சம்சாரவாழ்க்கை   இருக்குது யென்றெண்ணி
இருமாப்படைந்திடாதே   கெட்ட இல்லறத்
தாசையால்   அரியை மறந்து நீ
ஏமாந்திருந்திடாதே   வரும் சூதே   (பரங்)

மனதை மயக்கும் மாதர்   மோக வலையில் சிக்கிப்
பொன்மலையை மறந்திடாதே நாளும்
குணமுடன் ராமசாமி   சாற்றும் கீர்த்தனம்
பார்த்தும் குற்றத்திற் காளாகாதே யிப்போதே.   (பரங்)

நடராஜ தயாநிதியே என்ற மெட்டு.

பல்லவி.

ஜெயராமா ரெகுபதியே   உன்னை
தெரிசித்தே னைய்யனே   ஜெயம்தரும்   (ஜெ)

அனுபல்லவி.

தயவாகிய உன்   பதமலர் தந்திடும்
நயமுடன் துளபம்   நாடிப் புரியும் அரி   (ஜெ)
கதிரோங்கிடும் காளிங்க   மடுவ தனில்
விதமுடன் நர்த்தனம்   மேவிடும் தாங்தோன்றி (ஜெ)
மாதாம் சீதா தேவி   மனமகிழும்
மங்கையர் குணாளன்   தயாளன் மங்களமாகவே
யெங்கும் புகழ்   தான்தோன்றி   (ஜெ)
சேயாகிய ராமசாமி   யுரைக்குமொழி
செவிதனிற் கேழ்க்க   வில்லையா - தேவர்
மூவர் யாவர்புகழ்   தான்தோன்றி   (ஜெய)

வேலனே இந்த வீணனை யேன்படைத்தாய் என்ற மெட்டு.

பல்லவி.

ராமனே யிச்சண்டாளனை   ஏன் படைத்தாய் - யிது
நலமா யுடல் சதமா உனை விட
வேரொரு கதிவேரில்லை   (ராமனே)

அனுபல்லவி.

நேமமுடன் அரி பாதம் மனதினில்
நெஞ்சிற் துதித்திடவே வரும் காமாதிகாரப்
பிரபஞ்ச வாழ்க்கை கடக்க அளித்திடவே நாளும்
சேமமுடன் ஆதிமூலமந்திரம் ஜெபத்திலனுத்திடவே - யான்
சேவித்துனை உபாசித்தனன் நேசத்துடன் பூசித்தருள் (ரா)

பஞ்ச பாண்டவர்க்கு அஞ்சலியஸ்தனுய்
பாதம் மிகப்புரிந்தாய் அந்தப் பாவை துரௌபதை
அண்ணுவென்றழைக்க பன்பாய் துகில்புரிந்தாய்
தஞ்சமென்றேன் யேழை அஞ்சிட்டாமல் நாளை
தருவாய்பதி குணமேயருள் புரிவாய் வெகு வரமே அரி (ரா)

நாளு முன்பாதம் பணியாத நெஞ்சமா - நல்லறிவில்லாத
யேழைமேல்வஞ்சமா பாளு மூடம்பு படுந்துயர்கொஞ்சமா
பாராவிடில் ராம சாமிசொல் மிஞ்சுமா
பாதம் தரவே யருள்புரி சீதா பரனே முரகரி
நாதா யெனை நீ யாதரி வேதா தான்தோன் றியில் புரி (ரா)

குடியில் பிறந்த குயிலே என்ற மெட்டு.

பல்லவி.

அண்டமெல்லாம் புகழ் கொண்ட செவ்வாயனே
அண்டினே னுன்பாதம் எண்டிசை கார்க்கும்
அய்யனே வந்தருள்வாய் அதிசுகம்
மெய்யனே தந்தருள் ஆரணனே - காருமினி - பூரணமாய்
அன்புவைத் தாண்டருள்வாய் (அண்)

புண்டரீகா பூமி அடியா லளந்துமே
கண்டு கிரிமலை தன்னை சுமந்துமே
புகழ்பெற்ற கெம்பீரா பூதகியின்பால் மகிழ்ந்துண்ட
ஒய்யாரா - உன்னை போற்றினேன்யான் - கார்த்தருள்ளும்
நாற்றிசையும் புகழ்பெற்ற சிங்கமே நீ (அண்)

வானரசேனையில் வாலியென்போன் றன்னை
தீனதயாளா வுன்காரணத்தாலே நாரணு நீ மடித்தாய்
சுக்கிரீவர்க்கு பட்டமே நீ கொடுத்தாய்
வாமனனே - தாமதமே - நீ செய்யாமல்
நேமமுடன் வருவாய். (அண்)

அட்டாள தேசமும் எட்டா தரும்பொருள்
பட்டாபி ராமனே இஷ்டரைக் காக்கும்
அஷ்ட லட்சுமி மாரனே ராமசாமி பத்தன்
கஷ்டம் தீர்த்தருள் மலைவாசனே - ஆண்டருள்செய்
வேண்டினேன்மெய் - பாண்டவர்பணிநேயனே (அண்)

பாரோர்புகழ் பண்டரி என்ற மெட்டு.

பல்லவி.

நாடோர் புகழ் தாந்தோன்றி மீதே உலாவும் அரி
ராமர் பதத்தை போற்றுவோம் - அனுதினம்
அவருட பஜனை யென்னாளும் சாற்றுவோம்
தேடர்க்கரிய சின்மய ரூபம் - பாடுவோர்க்கருள்தரும்
பாக்ய சாரூபம் - பணிந்தால் வருமே அனேக சுகம்
வெகு பூர்த்தியாய் இருந்தே யடையலாம் யோகம். (நாடோ)

அனுபல்லவி.

அச்சுதன் மலரடி பச்சமுடன் பணிந்து
பச்சமாலென்று போற்றினால் - அவர்
திருவவதாரத்தை நிச்சயமாகச் சாற்றினால் - அவர்
பட்சமே வைத்து ரக்ஷித்தருளுவார் - தட்சணம்நல்வழி
இச்சையா யருளுவார் - இம்சையென்பது வராது
திருவருள் புரிவோர்க்கு அம்சம் யெந்நாளும்குறையாது.

கேசவன் தியானமதை ஆசையுடனே யெண்ணி
நேசமுடனே நண்ணினால் - அவர்பதம்வெகுகெதியெனப்
பாடிப் பஜனை பண்ணினால் - அவர் நிதமே வருவார்
பதமே தருவார் - சதமே அவரென - விதமாயெல்லோரும்
பாடுங்கள் கோவிந்தம்யென்று - கோஷ்டத்துடனே
தேடுங்கள் கிருபைதா வென்று (நாடோர்)

நாராயண மந்திரம் - பாராயணமே செய்தால்
தீராப் பிணிகள் தீரும் - நாம் முன்னாள்செய்த
பாவம் விலகிடும் பாரும் - அவர் நாலாம்பதமே
சீலமாய்த் தருவார் காலனுபாதை - அணுகாமல்புரிவார்
மேலாம் பதத்தைப் போற்றுங்கள் - ராமசாமி
பக்தன் கீர்த்தனை சாற்றுங்கள் (நாடோர்)

ஜெனனம் யெடுத்தபோதே என்ற மெட்டு.

பல்லவி.

என்னேரமும் மனதில் கண்ணாவுன் பதமலர்
எண்ணிப் பணிந்தேன் அய்யனே (என்)

அனுபல்லவி.

இன்னாள் வந்தென்னை நீ கண்ணினால் பார்த்திடும்
மன்னா யென்குறை தீர்த்திடும்
ஏது இவ்விதம் - வாதுசெய்வது - தகாது
ஏழைமேல் சூதுபுரிவது. (என்)

சங்கு சக்ர பாணியே யெங்கும் நிறை சோதியே
சிங்கார குணா னிதியே - இச்
சகல உயிர்களை இரவு பகலாக
புகழும் படிக்கி நீ சுகமே யளித்தவா (என்)

கோதண்டம் புரிந்தோனே கோபாலர் சினேகனே
தாந்தோன்றி அமர்ந்தோனே - வெகு
குணமே - யருள்புரி - தினமே வரும் அரி - மூனமே
ராமசாமியின் மணமே சுகம்புரி. (என்)

பொன்னம்பலத்தினில் பன்னகம் புலியால் என்ற மெட்டு.

பல்லவி.

இன்னும் பராமுகமா எளியேன்மேல்
என்ன இது வர்மமா ராமா (இன்னு)

அனுபல்லவி.

கன்னியர் சீலனே காருண்ய லோலனே
கார்மேக வண்ணனே கலிக்கவதாரனே
காராய் வரம் - தாராய் நிதம் - பாராயருள் - கூராய்விதம்
கண்டேன் துயர் விண்டேன் குறை
என்றுன் பாதம் தந்தாண்டிட (இன்னும்)

வாரும் கருடனேரி வரம் தந்திடவே கோரி
காருமிவ் வேளை கைசோரவிடாதென்னை
தாருமுன் றாளை தந்திடும் நாளைத்
தருணமிதுவே அருள்புரி கிருபைவரவே சுகம்புரி
பரமானந்தமே சரகரி உனையே துதித்தேன் முரகரி.

ஏழைபங்காளா ராமசாமிபக்தன் துதித்தேன் குணாளா
நாளுமுன் பாதத்தை நாடித் துதித்திட்டேன்
ஆளும்படிக்கியென் குறையை வுரைத்திட்டேன்
அய்யா மலர்க்கையா அருள் துய்யா ராமைய்யா
அண்டினேநா னுன்கிருபை என்றும் கார்ப்ப துன்பெருமை.

துடிக்கு மயிலில் நடிக்கும் புண்ணியனே என்ற மெட்டு.

பல்லவி.

சிரக்கும் கருடன்மே லிருக்கும் புண்ணியனே
தேவாதிதேவர் தினமும் துதிக்கும் லோக கன்ஃயனே நீ
நிரக்கப் பார்க்கடல் - சிரக்கப் பஞ்சணை - உரக்கமமர்ந்து
இருக்கும் மாயனே - உனைவிடயிந்த ஜெகத்திலாரைய்யா
ஏழையைக் கார்க்க - ஒருவருமில்லை காரும் ராமய்யா (சி)

அநுபல்லவி.

கோரநரசிங்க ரூபமானவனே இரணியன் குடலை
குலுங்கயெடுத்து மாலை பூண்டவனே - உன்னைக்
கோரிடத் தேவர்க் - காரிடத் தாபம் - தீரிடும்படி
சீருடன்செய்த ஸ்ரீதரா வுன்கிருபை நாளுமே - தினம்
துதித்தனன் சிந்தைமகிழ்ந்து நாளும் ஆளுமே (சி)

இரேழுலகினில் கீர்த்திபூண்டவா தாக்கோன் மீமலையில்
ஏக சக்ராதிபதி யாக ஆண்டவா நீ எழிலுடன்
லோகம் நலம்பெரும்படி பெலம் பொருந்திய
நிலமை தந்தருள் எண்ணினே னுன்னுமந் தன்னையே
மனந்தனில்துதி பண்ணினே னுன்பாதம் நண்ணியே (சி)

புவியில் ஜெனனம் எடுப்பதே பாவம் பிரந்துன் னாமம்
பேசா திருப்ப ததிலினும் பாவம் - உன்னை
புவியிற்றுளபம் குவிய அர்ச்சனை செவியிற் றூங்கியே
நயமுற்றாண்டருள் புண்யனே மெஞ் ஞானமூர்த்தியே
அன்பர்பேரில் கன்யனே பாதம் தாரும் கீர்த்தியே (சி)

பாடும் பாவலர்க்கன்பு புரிந்தவா ராமசாமி பத்தன்
பாடும் கீர்த்தனம் மீதிர் சிறந்தவா அந்த பானுவின்குல
தானுவே யுனை நானுமே துணை பேணினே னருள்
பஞ்சையின்மே லன்புகூர்ந்திடும் பதமலரடி
தஞ்சமென்றே நல்வழியே யீய்ந்திடும். (சி)

நசி சும் சும் சும் பியாரி என்ற மெட்டு.

பல்லவி.

ராம் ராம் ராமென்று நாடித் தினம் பஜனைத்
தேடிப்புரிய அருள் தா தா தா (ராம)

அனுபல்லவி.

சேமத்துடன் கிருபை ராமத்தியானம் செய்ய
தினமும் கருணையுடன் வா வா வா
தேடியே நாடினேன் பாடியே ஆடினேன்
சித்தம்வைத்து இத்தருணம் பத்தனைவந் தாள்வாயரி (ரா)

எத்தனை குற்றங்கள் எளியேன் செய்தாலும்
எவ்வித கஷ்டங்கள் நேர்ந்து விட்டாலும்
என்செய்வேன் உன்செயல் பஞ்சைநான் கெஞ்சினேன்
கம்சனை வதைபுரிந்த நெஞ்சமே வந்தாண்டருள்செய் (ரா)

பாவி படுந்துயர் நீ பார்க்கலாகாதா உன் பத்தன்
ராமசாமியின் மேலென்ன வாதா உன் பாதமே
நீதமாய் நாதனே தந்தருள் பக்திபுரிந்தேழைமீதில்
முக்தி கொடுத் தாண்டருள்செய் (ரா)

தையலே சையோகம் செய்யாவிடில் என்ற மெட்டு.

பல்லவி.

நாவா லுனைப்போற்றி பாவலர் கொண்டாடும்
நவரச அலங்காரமே உன்னை நாடினேன் சிங்காரமே

அனுபல்லவி.

புவனமதிற்தாதா புகழும் கண்ய நீதா
போதா நன்னீதா சங்கீதா லோகநாதா
போற்றிப் பணிந்தேனுன்னை தூய ராற்றும்படிக்கேயென்று (நா)

தவத்திலருள்முக்தி தானே வரும்பக்தி
தாவா நீ காவாய் நீ வாவா துயர் தீர்வாய்
தானே வரும் யோகனே தாந்தோன்றியில்
நாடும் பொருள் தியாகனே (நாவா)

ஏழை நானும் பாவி யெப்போதும் துயர்மேவி
எண்ணி மனம் நண்ணி குண்ணி துயர் பண்ணி
ஏங்கவிடலாகுமா என்பணியும்
தாங்காமல் வீண்போகுமா. (நாவா)

நர்தா லோகவேதா நாவலர் சங்கீதா
நாடித்தினம் தினம் தேடிப் புரிவோர்க்கு
மெய்ஞானம்தரும் சீமானே ராமசாமிக் கருளுங்கோனே.

மயிலேவடி வேலனே டேதிர்வாவா என்ற மெட்டு.

பல்லவி.

கருடனே வாசு தேவரோ டெதிர் வா வா 14858
கருடனே வாசுதேவ ரோடெதிர் வா வா

அனுபல்லவி.

நருமலர் பாதன் நளின சிங்காரன்
நாளும் துதிசெய்ய நாடியின்னேரம் (கரு)

தாந்தோன்றி வாசன் சத்திய வுல்லாசன்
சாந்தமா யேழையைக் காக்கும் பிரகாசன் (கரு)

பூசுரர் நாட்டம் புகழும் கொண்டாட்டம்
பேசுவார் கூட்டம்பி ரபல்ய ஆட்டம் (கரு)

தாசாங்க கூட்டம் சங்குடன் கோஷ்டம்
சாமாராதனை மலைசுற்றி யெங்கும் சிரேஷ்டம் (கரு)

பக்தர்கள் நேசன் பஜனைக் குல்லாசன்
பாலன் ராமசாமி பாடல்க்கருள் வாசன் (கரு)

ராமனே ரவிகுல பாண்டிய என்ற மெட்டு.

பல்லவி.

சீலனே தசரதனருளிய பாலனே (சீலனே)

அனுபல்லவி.

கோல்மர் அயோற்றியில் குணமுடன் பிரந்தாய்
கோசிகன் வேள்வியை நேசமாய் முடித்தாய்
பேசிடும் தாடகை உயிர்தனை முடித்தாய்
பிரபல்யமாகவே சிரந்துமே விடுத்தாய் (சில)

மாபலியிடம் மண் மூன்றடி கேட்டாய்
மாய ஜாலத்தா லிரண்டடிச்சேர்த்தாய்
மீதியடிக்கு அவர் சிரத்தையும் தீர்த்தாய்
மிருசக்ரவர்த்தியை யுன் பாதத்தில் சேர்த்தாய் (சில)

பரமன் பத்மாசூரனுக்கு வரமது அளிக்க
பாவி தொடுவேனென்ற போதவர் மூளிக்க
பரமாத்மா வென்று தியானித்து நினைக்க
பச்சமாய் மோகினி ரூபமே யெடுக்க அந்தப்
பாவி சூரன் - மேவ ஆசை - மோசமாக - நாசம்செய்த (சில)

ஏழையின் குறைகளை தீர்க்காதது நலமா
ஏகமாய் பஜனையின் முழக்கத்தின் பலமா
நாளுமுன் பாதம் துதிக்காத மனமா
ராமசாமி பத்தன் மேலென்ன சினமா (சில)

மஞ்சு நிகர் குந்தள மின்னே என்ற மெட்டு.

பல்லவி.

இத்தனை வர்மமு மாருமா தாந்தோன்றி வாசா
சார்ந்த வுல்லாசா இன்னும் என்மீது என்னகோபமா - நான்
ஏழை யுன்பாதம் நாளும் போற்றியும் வேளையறிந்து
ஆழாத கீர்த்தியும் என்ன வென்று சொல்லிடவாகும்
நீ பாராவிட்டால் எவ்விதமாய் என் ஜென்மம் ஈடேறும் (இ)

நத்தியே யுன்னை நித்தம் துதித்திடவே கோவிந்தாவென்று
தியானித்தென்றும் நாராயண மந்திரம் யென்றும் பலித்திடவே
உன்னை நாடியென் மனம் வாடியும் தினம் தேடியும் கிருபை
கூடாதிருப்பது வஞ்சக மிப்படியாகுமா அடியேன்யான்
கெஞ்சுவதும் வீணே போகுமா. (இ)

அஞ்சலென்றுன்னை கெஞ்சிப் புரிந்திடவே பஞ்சையும் நானும்
தஞ்சமே பூணும் அரி அரியுனை யானும் பணிந்திடவே
யெனதாவி யுனதுளம் மேவிய் புரிந்தும் இப்பாவிக்
கொருவிதம் கூவிப்புரியாது ஆகுமாயிது தர்மமாகுமா
உந்தன் பாதம் பணிவதெல்லாம் வீணேபோகுமா (இ)

பாருமுலகினில் பாவமதை போக்கி தயவுண்டாக்கி
கிருபையாக்கி பக்தன் ராமசாமிக் கருள் நோக்கி உன்
பக்தியருளவே சித்திமிகுத்திடும் நத்தினேனுனை
முக்தியடையவே நம்பினே னுன்பாதம் தன்னையே
மனந்தனில் பரந்தாமா உன்னை யெண்ணியே. (இ)

பழனிமலையி லமரு முருகர் என்ற மெட்டு.

பல்லவி.

பக்தி சிரந்திடும் உற்ற தான்தோன்றிவாழ்
சுத்த மெஞ்ஞானத்தை நாடும்—அவர்
சித்தமே யென்னாளும் கூடும்—நாம்
பக்தியாய் நத்தியே புத்தியாய்ப் பூசித்தால்
சித்தமே னிரங்காது ஒரு வித்யாசமு மணுகாது
புத்திதனிற் சிரந்த புண்யகெம்பீரன்-இப்பூவுலகை
ஆளவந்த புகழும் சிங்காரன்—நத்திடும்
தேவர்க்கெல்லாம் ஞான கெம்பீரன்—நாலாம்
பதமருளும் லட்சுமி மாரன்—அவரை
நாவினல் மேவியே கூவி—யென்னேரமும்
பூவின லர்ச்சனைபண்ணும் அவர்—பாதமே
நிச்சயமெண்ணும் ராமசாமி—கீர்த்தனத்தை
நண்ணும் (பக்தி சிரந்திடும்)

அய்யா பழனிமலை வேலா என்ற மெட்டு.

தேவா தான்தோன்றிமலை வாசா உன்னை
தெரிசித்தேன் ஞானப்பிரகாசா
பாவ விமோசனனே னேசா—யென்றும்
பத்தரைக்கார்த்தரு ளுல்லாசா—உன்
பாதம் பணிந்தே நான் சர்வேசா (தேவா)

அனுபல்லவி.

பெண்டுபிள்ளைக ளாசை கொண்டு—இப்
புவியி லலைந்தேன் சுகம் விண்டு
என்றுமுன் பாதம் துதிகண்டு உமதேவல்
புரிந்திடுவேன் தொண்டு எப்படியோ வுன்தயவு
அப்பனே நீ கார்த்தருள்வாய் (தேவா)

பந்தபாச மெனுந்தொல்லை யென்மேல்
எந்தவேளையிலும் சள்ளை நந்தாகோவிந்தாவுன்சொல்லை
நான் நம்பியும் மனம் வரவில்லை
நீடும் பொருளேயுன்னைத் தேடித்துதித்தேன்அரி (தே)

மௌனமாயிருக்க வொண்ணாது—மனம்
மகிழ்ந்து ராமசாமியின் மீது—உன்
கெவனமிருக்கும்படி யோது—அருள்
கிருபை யெனக்கரு ளிப்போது—உன்
கீர்த்தியுமே நாற்றிசையில் போற்றிப் புரிந்தேன் அரி ()

உள்ளம் மிகமகிழும் என்ற மெட்டு.

பல்லவி.

கண்ணாவுன் தியானமதை எண்ணித் துதித்தேன்யான்
மன்னாவந் தாண்டருளுவாய் கிருபை புரிகுவாய்
மன்னாவந் தாண்டருளுவாய்
காரணமாகிய-நாரணதேவா-பாரும் துயரத்தை-தீர்க்க நீ வா வா (க)

என்னேர மும்பஜனை தன்னிற் சிறந்தவா-ஏழுமலைக்குகந்தவா
எங்கும் நிரைந்தவா - ஏழுமலைக்குகந்தவா — உன்னை
ஏற்றித்தொழுதுமே போற்றிப் புரிந்திட சாற்றிய வல்வினை
வாராய்ப்பரந்திட (கண்ணா)

எக் சராசரங்கள் யாவும் படைத்தவா இலங்கேசன் தன்னைத்
தீர்த்தவா - பாதம் சேர்த்தவா - இலங்கேசன் தன்னைத் தீர்த்தவா
எம்பெருமானே - நம்பினேன் நானே - தும்புரு நாரதர்
அன்புருவோனே (கண்ணா)

வேதா - தாந்தோன்றிமலை நாதாவந்தாண்டருள் பொற் பாதா
கிருபை பூண்டருள் - தினம் ஆண்டருள் பொற் பாதகிருபை
பூண்டருள் - உன்னை மேவித்துதித்திட கூவிச்சுகித்திட
நாவிற் படித்திட ராமசாமிக் களித்திட (கண்ணா)

படம் விரித்த மகுடம்வைத்த என்ற மெட்டு.

பல்லவி.

சங்குடன் வாத்தியம் எங்கு முழங்கிடும்
மங்கைவாசா பொன் தங்கிய தான்தோன்றி
மலையிலமர்ந்திடும் வெங்கிடேசா (சங்கு)

அனுபல்லவி.

மங்களமாகவே நங்கையர் நர்த்தனம் புரியும் வாசா
உலகெங்கும் புகழமேவ சங்கீத சாயித்யம் தங்கும் நேசா (சா)

அந்தர துந்திமி யெங்கு முழங்கிடும் பந்த சேர்வை
பக்தர் சிந்தை மகிழ்ந்துமே யெங்குமே பாடுவார் பஜனைகோர்வை
விந்தை யுடனருள் வந்துமே தந்தருள் கெருடசேர்வை
நந்த கோவிந்தனே சுந்திரமாய்க் கண் பாரும் பார்வை (சங்கு)

கந்தமலர்க் குழல் சுந்திரஜானகி போற்றும் நேயா - அனுமான்
சொந்தமுடன் தினம் வந்து வணங்கிடக் காப்பாற்றும் தாயா-என்றும்
விந்தையுடன் விஸ்வ குலத்திலுதித்திடும் பக்தன் நேயா - உன்னை
சிந்தையில் துதித்திடும் ராமசாமியை பார்சகாயா (சங்கு)

முத்தி நெறி யறியாத என்ற மெட்டு.

பல்லவி.

நாரணனே யுனை நாடி நான் துதித்தேன்
தினம்பாடி (நாரணனே).

காரணமாய் வந்தருளும்
கடாச்சமது தந்தருளும்
பூரணமாய் அன்பருளும்
பொன்மலையில் நின்றருளும் (நாரண)

பாடல் படித்தறியேன் உன்
பக்திநெறி கண்டறியேன்
நாடித் துதிக்கும்வகை
நன்கருளும் நாரணனே (நாரண)

இல்லாத வாசகங்கள்
எப்பிழைகள் எய்திடினும்
வல்லோனே நீபொருத்து
நல்வாக்கருளும் நாரணனே (நாரண)

பக்தியுடன் ராமசாமி
பக்தன்கவி படிப்போரும்
எத்திசையில் கேட்பவரும்
என்னாளும் வாழ்ந்திடவே. (நாரண)

மங்களம்.

பல்லவி.

மங்களம் மங்களம் மங்களம் நித்ய
ஜெய மங்களம் மங்களம் மங்களம்.

சென்னை-600 0
148578

அனுபல்லவி.

எங்கும் புகழ் படைத்த
சிங்கார ராமருக்கும்
மங்கை லட்சுமிதேவி
மாது அலமேலுக்கும் (மங்கள)

நித்தியனுஷ் டானபூஜை
சித்தியா யடைந்திருக்கும்
கர்த்தனும் வெங்கிடரமணர்
சத்தியுடையவர்க்கும் (மங்கள)

முப்புரிநூ லணிந்திடும்
அற்புத விஸ்வபிரம்மா
விற்பன ராமசாமிபத்தன்
செப்பிடும் கீர்த்தனத்திற்கும். (மங்கள)

முற்றிற்று.

☞ தான்தோன்றி வெங்கட்ரமணஸ்வாமி பேரில் கீர்த்தனை இரண்டாம்பாகம் கூடிய சீ[illegible]ம் வெளிவரும்.